## 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்

## ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

## MCOP No.6000/2019

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | மசா.1 |
| பெயர் | பழனி |
| க/த.பெயர் | சோழப்பிள்ளை |
| வயது | 60 |
| விலாசம் | மேட்டுக்குப்பம், சென்னை |
| தொழில் | |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 17.07.25 ல் பதிவு செய்யப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தது எனது மகன். விபத்து 2019ம் வருடம் மதியம் 2 மணிக்கு முன்பாக நடந்தது. சாலையை கடக்கும் போது விபத்து நடந்தது என்றால் சரிதான். அந்த சாலையில் போக்குவரத்து சிக்னல்கள் எதும் இல்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியது இருசக்கர வாகனம் 5752. சோழிங்கநல்லூரிலிருந்து திருவான்மியூர் நோக்கி போகின்ற வண்டி இடித்தது. விபத்து ஏற்பட்ட உடனே ராயபேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். அங்கு 6 மாதம் 2 கால்களில் எலும்பு முறிவு ஏற்பட்டு ஸ்டில் பிலேட் அறுவை சிகிச்சை பெற்று உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். விபத்து சமயத்தில் பிளம்பர் வேலை பார்த்தேன். ஒரு நாளைக்கு ரூ.1300/- கூலியாக பெற்றேன். மாதிரி வரைபடம் தாக்கல்

செய்துள்ளீர்களா என்றால் செய்துள்ளேன். நான் சாலையை விதிகளை மீறியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தால் ரூ.2000/- அபராதம் செலுத்தி உள்ளார் அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

**5 வது நீதிபதி**
**சென்னை**